8
29/8/18

**கடலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை: திரு.எஸ்.சங்கர், எம்.ஏ.,**

**ந.க.எண்.பஅ3/6469/2017** **நாள் :21.08.2018**

**பொருள்:** பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி- IV-க்கான போட்டித் தேர்வு 2015-2016 - தெரிவு செய்யப்பட்ட நேரடி நியமன சுருக்கெழுத்து தட்டச்சர் பணிநிலையில் கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்து பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து உத்தரவிடல்.

1797

29 AUG 2018

**பார்வை:**
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடித எண்.5277/PSD-G2/2017-1, நாள்.25.09.2017.
2. கடலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.பஅ3/6469/2017, நாள்.08.11.2017
3. சம்பந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட முன்மொழிவு மற்றும் பணிப்பதிவேடு.

=====

**உத்தரவு:-**

பார்வை 1ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தின் மூலம் கடலூர் மாவட்டத்திற்கு 2015-16 ஆண்டிற்கு 1 சுருக்கெழுத்து தட்டச்சர் ஒதுக்கீடு செய்யப்பட்டார். தேர்வாணையத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டவருக்கு பார்வை 2ல் காணும் நடவடிக்கைகளின் வழி பணிநியமன ஆணை வழங்கி உத்தரவிடப்பட்டது.

பார்வை 1ல் காணும் செயலாளர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடிதத்தில் ஊரக வளர்ச்சி அலகில் சுருக்கெழுத்து தட்டச்சராக பணியமர்வு செய்யப்பட்ட பணியாளருக்கு கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group IV services 2015-2016 recruitment"**

எனவே கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் தற்போது பணிபுரியும் கீழ்கண்ட சுருக்கெழுத்து தட்டச்சர் பணியினை பார்வை1ல் காணும் செயலாளர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலையில் பணியினை வரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| வ எண் | பெயர் / பதவி / பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | என்.வாசுகி, சுருக்கெழுத்து தட்டச்சர், உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அலுவலகம், கடலூர். | 16.11.2017 மு.ப | 16.11.2017 மு.ப |

பணிவரன்முறை செய்யப்பட்ட விபரம் தனியர்களின் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)
கடலூர்

**பெறுநர்**

என்.வாசுகி,
சுருக்கெழுத்து தட்டச்சர்,
உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அலுவலகம், கடலூர்.
(உரிய வழிமுறையாக)

ந.க. எண்: அ1/2067/2017
நாள்: 07-09.2018

உதவி இயக்குநர் (ஊ)
அலுவலகம் கடலூர்.

// நகல் சார்பு செய்யப்படுகிறது //

உதவி இயக்குநர்
(ஊராட்சிகள்)
கடலூர் - 607 001.

பெறுநர்:

திருமதி. என். வாசுகி,
சுருக்கெழுத்து தட்டச்சர்,
உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம்,
கடலூர்.